பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

14 06 2026 SUNDAY 6 30 PM

## வணக்கம்-மாநிலச்செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1) முதலீட்டுக்கு உகந்த நாடாக இந்தியா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்த செலவில் தரமான மருத்துவம் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3) மாவட்டந்தோறும் புற்றுநோய் சிகிச்சைக்கான சிறப்பு மையம் ஏற்படுத்தப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

4) தமிழகத்தில் பெண் காவலருக்கே பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது.

5) உலக கோப்பை வில்வித்தைப் போட்டியில், இந்தியா இன்று தங்கப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<

முதலீட்டுக்கு உகந்த நாடாக இந்தியா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக பிரான்ஸ் சென்றுள்ள அவர், புதுமை கண்டுபிடிப்புகள் தொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

உற்பத்தி, தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளில் முதலீட்டிற்கான ஏராளமான வாய்ப்புகள் இந்தியாவில் உள்ளதாக பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்த செலவில் தரமான மருத்துவம் கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு கடந்த 12 ஆண்டுகளாக மேற்கொண்ட நடவடிக்கைகளை பட்டியலிட்டுள்ளார். மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான இடங்களும் வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், 50 கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைந்து வருவதாகவும் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

>>>>>><<<<<

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் புற்றுநோய் சிகிச்சை அளிப்பதற்கென சிறப்பு மையம் அமைக்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் கூறியுள்ளார். ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

>>>>>><<<<<

தமிழகத்தில் பெண் காவலருக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் உருவாகியுள்ளதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது. இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், சிவகங்கையில் பெண் காவலருக்கு சிலர் பாலியல் தொல்லை கொடுத்த சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளது. விளம்பரத்தில் கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதை த.வெ.க. அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் திமுக அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

>>>>>><<<<<

உடற்கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கையில் த.வெ.க. அரசு சமரசம் செய்யக்கூடாது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார். இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இக்கோரிக்கை விடுத்துள்ளார். அரசு பள்ளிகளில் 250 மாணவர்களுக்கு ஒரு உடற்கல்வி ஆசிரியர் என்ற விகிதத்தை, முந்தைய திமுக அரசு 700 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று மாற்றியதை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையே த.வெ.க. அரசும் பின்பற்றுவதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சி அளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

பள்ளிகளில் மாணவர்களின் ஒழுக்கத்தை கண்காணிப்பதில் உடற்கல்வி ஆசிரியர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். இதனை கருத்தில் கொண்டு பழைய நடைமுறையின்படியே, உடற்கல்வி ஆசிரியர்களின் நியமனத்தை த.வெ.க. அரசு தொடர வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**>>>>>><<<<<**

பள்ளிகளில் விளையாட்டு பாட வேளைகள் கட்டாயமாக்கப்படுவதை த.வெ.க. அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இளையோர் சரியான பாதையில் வழிநடத்தப்படுவதற்கு, சிறந்த தீர்வு விளையாட்டு தான் என்று கூறியுள்ளார். இதனை கருத்தில் கொண்டு கிராமங்களிலும், நகர்ப்புறங்களிலும் விளையாட்டுக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

**>>>>>><<<<<**

சேலத்தில் நடைபெற்ற பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் குறித்து சிபிசிஐடி விசாரணைக்கு த.வெ.க. அரசு உத்தரவிட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வறுமை நிலையில் உள்ள பெண்களுக்கு கடன் வாங்கித் தருவதாக கூறி, ஏமாற்றப்பட்ட சம்பவம் குறித்து முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

இதுதொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ள திரு. வீரபாண்டியன், அவர் மட்டுமே குற்றவாளி என்ற முடிவுக்கு வராமல், அவருக்கு பின்புலமாக இருந்து செயல்பட்டவர்களை கண்டுபிடிப்பது அவசியம் என்றும் கோரியுள்ளார்.

**>>>>>><<<<<**

மயிலாடுதுறை மாவட்டம், எலந்தக்குடியில் குதிரை ரேக்ளா வண்டி பயிற்சி ஓட்டம் இன்று நடைபெற்றது. இதனை ஏராளமானோர் ஆர்வத்துடன் கண்டு ரசித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார். எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

>>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

மதுரை, காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் மாநில அமைச்சர் திரு. ராஜ்மோகன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாநில அமைச்சர் திரு. ரஞ்சித்குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<

மயிலாடுதுறை மாவட்டத்தில் தேசிய டிஜிட்டல் கால்நடை திட்டத்தின்கீழ், விவரங்களை பதிவு செய்வதற்கு, கால்நடை வளர்ப்போர் மற்றும் உரிமையாளர்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று ஆட்சியர் திரு. ஸ்ரீகாந்த் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<

கோவை-சென்னை இடையேயான வந்தேபாரத் ரயில் மீது கல்வீசியது தொடர்பான சம்பவத்தில், 8 சிறுவர்களை ரயில்வே காவல்துறையினர் பிடித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

>>>>>><<<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 15 ஆயிரத்து 710 மெட்ரிக் டன் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டு, 16 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக ஆணையாளர் திரு. சமீரன் கூறியுள்ளார்.

>>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை வில்வித்தைப் போட்டியில், இந்தியா இன்று தங்கப்பதக்கம் வென்றது.

துருக்கியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில், Dhiraj Bomma Devara - Kum Kum இணை 5-1 என்ற புள்ளிக்கணக்கில் தென்கொரியாவின் Kim Je Deok - Oh Yejin இணையை வென்று இப்பதக்கத்தை கைப்பற்றியது.

>>>>>><<<<<

பிரான்ஸில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Parul Chaudhary வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஐயாயிரம் மீட்டர் ஓட்டத்தில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>><<<<<

பிரான்ஸில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Rithvik Sanjeevi Satishkumar பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 17-21, 23-21, 21-16 என்ற செட்கணக்கில் குரோஷியாவின் Aria Dinata-வை வென்றார்.

>>>>>><<<<<

உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா-பாகிஸ்தான் இடையேயான ஆட்டம் இன்றும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

பர்மிங்காமில் நடைபெறவுள்ள இப்போட்டியில், டாஸ் வென்ற இந்தியா, முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

>>>>>>END<<<<<